பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4
06 02 2025 **THURSDAY** 12 40 **PM**
ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. பொதுத்தேர்வுகளை அச்சமின்றி எதிர்கொள்வது குறித்த கலந்துரையாடல் நிகழ்ச்சியில் மாணவர்களும், பெற்றோர்களும் தவறாது கலந்து கொள்ளுமாறு பிரதமர் திரு. நரேந்திர மோடி கேட்டுக் கொண்டுள்ளார்.

2. ககன்யான் விண்கலம் அடுத்த ஆண்டு விண்ணில் செலுத்தப்படும் என்று மத்திய இணையமைச்சர் திரு. ஜிதேந்திர சிங் தெரிவித்துள்ளார்.

3. விவசாயிகள் சங்க தலைவர் நாராயணசாமி நாயுடுவின் நூற்றாண்டு பிறந்த தினத்தை ஒட்டி தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் திரு. எல். முருகன் அவருக்கு மரியாதை செலுத்தியுள்ளார்.

4. பிரயாக்ராஜில் நடைபெற்று வரும் மகா கும்பமேளாவில் பழங்குடியினர் கலாச்சார நிகழ்ச்சி இன்று தொடங்குகிறது

5. இந்தியா - இங்கிலாந்து அணிகளுக்கு இடையேயான முதலாவது ஒரு நாள் கிரிக்கெட் போட்டி இன்று நாக்பூரில் நடைபெறுகிறது.

<<<<<>>>>>

பொதுத்தேர்வுகளை அச்சமின்றி எதிர்கொள்வது குறித்த கலந்துரையாடல் நிகழ்ச்சியில் மாணவர்களும், பெற்றோர்களும் தவறாது கலந்து கொள்ளுமாறு பிரதமர் திரு. நரேந்திர மோடி கேட்டுக் கொண்டுள்ளார்.

வரும் 10ஆம் தேதி நடைபெறும் இந்த நிகழ்ச்சியில், சத்குரு ஜக்கி வாசுதேவ், விளையாட்டுத்துறையைச் சேர்ந்த மேரி கோம், அவானி லெஹ்ரா, சுஹாஷ் யதிராஜ், திரையுலகைச் சேர்ந்த தீபிகா படுகோன், விக்ராந்த் மாஸே, பூமி பெட்நேகர் உள்ளிட்டோர் பங்கேற்று மாணவர்களுக்கு தன்னம்பிக்கை அளிக்கும் வகையில் உரையாற்றவுள்ளனர்.

இதுகுறித்து பிரதமர் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில் இந்த ஆண்டு, காலத்திற்கேற்ற பல்வேறு புதிய அம்சங்களுடன் இந்த நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதை சுட்டிக்காட்டியுள்ளார்.

இதில் மாணவர்கள், மனஅழுத்தமின்றி தேர்வுகளை எதிர்கொள்வதற்கான அம்சங்கள் இடம்பெறவிருப்பதாகவும் பிரதமர் தெரிவித்துள்ளார்.

<<<<<>>>>>

குடியரசுத்தலைவரின் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம் மீதான விவாதத்திற்கு மாநிலங்களவையில் பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று பதிலுரை ஆற்றுகிறார்.

நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத் தொடரின் தொடக்கமாக குடியரசுத்தலைவர் திருமதி. திரௌபதி முர்மு, கடந்த 31ஆம் தேதி இரு அவைகளின் கூட்டுக்கூட்டத்தில் உரையாற்றினார்.

இந்த உரை மீது மக்களவையில் நடைபெற்ற விவாதத்திற்கு பிரதமர் நேற்று முன்தினம் பதில் அளித்தார்.

அதனைத் தொடர்ந்து, மாநிலங்களவையில் நடைபெற்று வரும் விவாதத்திற்கு பிரதமர் இன்று பிற்பகல் பதிலளிக்கவுள்ளதாக நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் திரு. கிரண் ரிஜிஜு தெரிவித்துள்ளார்.

<<<<<>>>>>

இந்தியாவின் ககன்யான் விண்கலம் அடுத்த ஆண்டு விண்ணில் செலுத்தப்படும் என்று விண்வெளித்துறை இணையமைச்சர் திரு. ஜிதேந்திர சிங் தெரிவித்துள்ளார்.

செய்தி நிறுவனம் ஒன்றுக்கு பேட்டியளித்துள்ள அவர், இந்தியாவைச் சேர்ந்த ராகேஷ் சர்மா விண்வெளிக்கு சென்று வந்த போதிலும், அவர் ரஷ்ய விண்கலம் மூலம் அனுப்பப்பட்டதை சுட்டிக்காட்டினார்.

ஆனால், தற்போது முற்றிலும் உள்நாட்டு தொழில்நுட்பத்தில் வடிவமைக்கப்படும் ககன்யான் விண்கலத்தில் இந்தியர்கள் விண்ணிற்கு அனுப்பப்பட உள்ளதாக அவர் கூறினார்.

இதற்கான சோதனைகள் நடத்தப்பட்டு வருவதாகவும், இந்த ஆண்டு இறுதிக்குள் கடைசி கட்ட சோதனைகள் நடத்தப்பட்டு, ககன்யான் விண்ணில் செலுத்தப்படும் என்றும் திரு. ஜிதேந்திர சிங் தெரிவித்தார்.

<<<<<>>>>>

பெங்களூருவில் நடைபெறவுள்ள விமான கண்காட்சிக்கான ஒத்திகை இன்று நடைபெற்றது.

விமான தயாரிப்பில் இந்தியாவின் திறமைகளை எடுத்தரைக்கும் வகையில், பெங்களூருவில் உள்ள எலஹங்கா விமானப்படை தளத்தில் ஆண்டுதோறும் ஏரோ இந்தியா விமான கண்காட்சி நடத்தப்பட்டு வருகிறது.

இந்த ஆண்டுக்கான கண்காட்சி வரும் 10ஆம் தேதி தொடங்கி 14ஆம் தேதிவரை நடைபெறவுள்ளது.

15வது ஆண்டாக நடத்தப்படும் ஆசியாவின் முக்கிய விமான கண்காட்சியில் ஒன்றான இதில் 15 நாடுகளைச் சேர்ந்த விமான தயாரிப்பு நிறுவனங்கள் பங்கேற்கின்றன.

பினாகா ஏவுகணைக ளுக்கான வெடிபொருட்களை தயாரிப்பதற்கான 10 ஆயிரத்து 200 கோடி ரூபாய் மதிப்பிலான ஒப்பந்தத்தில் பாதுகாப்பு அமைச்சகம் இன்று கையெழுத்திடவுள்ளது.

கடந்த வாரம் நடைபெற்ற பாதுகாப்புக்கான மத்திய அமைச்சரவைக் குழுக் கூட்டத்தில் இந்திய ராணுவத்தின் இந்த ஒப்பந்தத்திற்கு அனுமதி அளிக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து பொதுத்துறை நிறுவனமான **Munitions India** மற்றும் நாக்பூரைச் சேர்ந்த சோலார் இண்டஸ்ட்ரீஸ் ஆகிய நிறுவனங்களுடன் இன்று ஒப்பந்தம் மேற்கொள்ளப்படவுள்ளது.

<<<<<>>>>>

தமிழக விவசாயிகள் சங்க நிறுவனர் நாராயணசாமி நாயுடுவின் நூற்றாண்டு பிறந்த தினத்தை ஒட்டி, தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் திரு. எல். முருகன் அவருக்கு மரியாதை செலுத்தியுள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில் விவசாயிகளின் வாழ்வாதாரத்திற்காகவும், அவர்களது வாழ்க்கை தரத்தை உயர்த்தவும் போராடிய திரு. நாராயணசாமி நாயுடுவின் தியாகங்களை போற்றி வணங்குவதாக குறிப்பிட்டுள்ளார்.

<<<<<>>>>>

பல்கலைக் கழக துணைவேந்தர் நியமனத்தில் ஆளுநர்களுக்கு கூடுதல் அதிகாரம் அளிக்க வகைசெய்யும் யுஜிசி-யின் புதிய வரைவு விதிமுறைகளுக்கு எதிர்ப்பு தெரிவித்து, புதுதில்லியில் எதிர்க்கட்சிகள் இன்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டன.

புதுதில்லி ஜந்தர்மந்தர் பகுதியில் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் மக்களவை எதிர்க்கட்சித்தலைவர் திரு. ராகுல் காந்தி, சமாஜ்வாதி கட்சித் தலைவர் திரு. அகிலேஷ் யாதவ் மற்றும் திமுக, மதிமுக, ஆர்எஸ்பி உள்ளிட்ட கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டு, இந்த வரைவு அறிக்கையை திரும்பப் பெற வேண்டும் என வலியுறுத்தினர்.

<<<<<>>>>>

இனி மகா கும்பமேளா குறித்த செய்திகள்.

*(சவுண்ட் பைட் - **Song** – 8 நொடிகள்)*

உத்தரப்பிரதேச மாநிலம் பிரயாக்ராஜில் நடைபெற்று வரும் மகா கும்பமேளாவின் ஒரு பகுதியாக ஆறு நாட்கள் நடைபெறவுள்ள பழங்குடியினர் கலாச்சார நிகழ்ச்சி இன்று தொடங்குகிறது.

இதில் நாட்டின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த 15 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பழங்குடியின மக்கள் பங்கேற்கின்றனர்.

பழங்குடியினரின் கலாச்சாரம் மற்றும் பாரம்பரியத்தை பாதுகாப்பதற்கான உறுதிமொழியும் ஏற்கப்படவுள்ளது.

சுதந்திரப் போராட்ட வீரர் பிர்ஸா முண்டாவின் 150வது பிறந்த தின கொண்டாட்டத்தையொட்டி, இந்த ஆண்டு பழங்குடியின கௌரவ ஆண்டாக அறிவிக்கப்பட்டிருப்பதையடுத்து, இந்த நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதனிடையே, கோவாவிலிருந்து பிரயாக்ராஜுக்கு இயக்கப்படும் சிறப்பு ரயில் சேவையை அம்மாநில முதலமைச்சர் திரு. பிரமோத் சாவந்த், பனாஜியிலிருந்து இன்று தொடங்கி வைத்தார்.

*(சவுண்ட் பைட் - **Song** – 8 நொடிகள்)*

<<<<<>>>>>

டாக்காவில் உள்ள பங்களாதேஷின் தந்தை என்றழைக்கப்படும் ஷேக் முஜிபூர் ரஹ்மான் நினைவு அருங்காட்சியகம், முன்னாள் பிரதமர் திருமதி. ஷேக் ஹசீனா எதிர்ப்பாளர்களால் நேற்றிரவு புல்டோசர் மூலம் இடித்து அகற்றப்பட்டது.

அந்த அருங்காட்சியகத்தில் இருந்த பொருட்களும் போராட்டக்காரர்களால் தீ வைத்து எரிக்கப்பட்டன.

<<<<<>>>>>

16வது நிதிக்குழுவுடன் ஒடிசா முதலமைச்சர் திரு. மோகன் சரண் மாஜி தலைமையிலான அம்மாநில உயர்நிலைக் குழுவினர் இன்று ஆலோசனை நடத்தினர்.

புவனேஷ்வரில் நடைபெற்ற இந்த ஆலோசனையின் போது, 2036ஆம் ஆண்டுக்குள் வளர்ச்சியடைந்த ஒடிசாவை உருவாக்குவதற்கான செயல்திட்டம் குறித்து விவாதிக்கப்பட்டது.

மேலும், ஐந்தாண்டு திட்டத்தின் கீழ், ஒடிசாவிற்கு 12 லட்சத்து 56 ஆயிரம் கோடி ரூபாய் ஒதுக்குமாறும் ஒடிசா குழுவினர் 16வது நிதிக்குழுவிடம் வலியுறுத்தியுள்ளனர்.

<<<<<>>>>>

அமெரிக்காவை தொடர்ந்து, இஸ்ரேலும் ஐ.நா மனித உரிமை கவுன்சிலிருந்து விலகுவதாக அறிவித்துள்ளது.

ஐநா மனித உரிமை கவுன்சிலும், ஐ.நா நிவாரணப் பணிகள் முகமையும், ஹமாஸ் அமைப்பினருக்கு சாதகமாக செயல்படுவதாக கூறி அதிலிருந்து விலகுவதாக அமெரிக்க அதிபர் திரு. டொனால்டு ட்ரம்ப் நேற்றுமுன்தினம் அறிவித்திருந்தார்.

இந்நிலையில், அமெரிக்காவின் முடிவுக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் இஸ்ரேலும் ஐ.நா மனித உரிமை கவுன்சிலிலிருந்து விலகுவதாக அந்நாட்டு வெளியுறவுத்துறை அமைச்சர் அறிவித்துள்ளார்.

இந்த அமைப்பில் கொண்டு வரப்பட்ட கண்டன தீர்மானங்களில் நூற்றுக்கு மேற்பட்டவை இஸ்ரேலுக்கு எதிரானவை என்பதால், இந்த முடிவை மேற்கொண்டிருப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

<<<<<>>>>>

அமெரிக்காவில் பெண்களுக்கான விளையாட்டுப் போட்டிகளில், ஆண்கள் பங்கேற்பதை தடை செய்து அந்நாட்டு அதிபர் திரு. டொனால்டு ட்ரம்ப் உத்தரவிட்டுள்ளார்.

மூன்றாம் பாலினத்தவரும் பெண்களுக்கான விளையாட்டுகளில் பங்கேற்பதற்கும் இந்த உத்தரவில் தடை விதிக்கப்பட்டுள்ளது.

<<<<<>>>>>

இந்தியா - இங்கிலாந்து அணிகளுக்கு இடையேயான முதலாவது ஒரு நாள் கிரிக்கெட் போட்டி இன்று நடைபெறுகிறது.

நாக்பூரில் பிற்பகல் 1.30 மணிக்கு இப்போட்டி தொடங்கவுள்ளது.

மூன்று போட்டிகளைக் கொண்ட இத்தொடரின் 2வது ஆட்டம் வரும் 9ஆம் தேதியும், மூன்றாவது ஆட்டம் 12ஆம் தேதியும் நடைபெறவுள்ளது.

<<<<<>>>>>

உத்ராகண்டில் நடைபெற்று வரும் தேசிய விளையாட்டுப் போட்டியில் துப்பாக்கிச் சுடுதல் 50 மீட்டர் ஏர்ரைபிள் பிரிவில் நீரஜ் குமார் தங்கப்பதக்கம் வென்றார்.

டென்னிஸ் ஆடவர் ஒற்றையர் பிரிவு அரையிறுதியில் ரிஷப் அகர்வால் - நிகி புனாச்சா இடையேயான ஆட்டம் தற்போது நடைபெற்று வருகிறது.

பீச் வாலிபால் போட்டியின் இறுதியாட்டத்தில் தமிழக ஆடவர் அணி-ஆந்திராவையும், மகளிர் அணி புதுச்சேரியையும் எதிர்கொள்கின்றன.

<<<<<>>>>>

சென்னை ஓப்பன் டென்னிஸ் போட்டியின் காலிறுதி ஆட்டத்தில் இந்தியாவின் ஜீவன் நெடுஞ்செழியன் - விஜய் சுந்தர் பிரசாந்த் இணை இன்று **Duhan - Javia** இணையை எதிர்கொள்கிறது.

<<<<<>>>>>

ஐ.எஸ்.எல் கால்பந்து போட்டியில் இன்று நடைபெறும் ஆட்டத்தில் கோவா – ஒடிஸா அணியை எதிர்கொள்கிறது.

கோவாவில் இப்போட்டி இரவு மணி 7.30-க்கு தொடங்கவுள்ளது.

<<<<<>>>>>